# क्षेत्रपति सुक्तम्

# க்ஷேத்திரபதி சூக்தம்

## Kshethrapathu Suktham

தமிழ் கவிதை வடிவில்...

பி. ஸ்ரீதேவிபிரசாத்

psdprasad.music@gmail.com

ஜனவரி - 2018

## ஸ்ரீ கணேசாய நம:

## ஓம் நமசிவாய:

# க்ஷேத்திரபதி சூக்தம்

உழவுத் தொழிலுக்கும், வயல்/ நிலங்களுக்கும் அதிபதியாக "சீதா" எனும் கடவுளை பல இடங்களில் ரிக் வேதம் போற்றுகிறது. அந்த "சீதா"வை 'க்ஷேத்ராதிபதி' (க்ஷேத்திரம் என்றால், இடம்/நிலம் அல்லவா?) எனப் போற்றியும் வேண்டியும் பாடும் இந்த ஸ்லோகங்கள் ரிக் வேதத்திலிருந்து எடுக்கப்பட்ட "க்ஷேத்ரபதி சூக்தம்" என்பதாகும்.

அதிலிருந்து எடுக்கப்பட்ட எட்டு ஸ்லோகங்களும், அதற்கான பொருள், தமிழ் கவிதை நடையிலும் இந்நூலில் பதிவுசெய்கிறேன்.

ஓம் நமசிவாய ! வணக்கங்களுடன்....

பி.ஸ்ரீதேவிபிரசாத்



क्षेत्रस्य पतिना वयं हितेनेव जयामसि ।

गामश्वं पोषयित्न्वा स नो मृळातीदृशे ॥१॥

நிலராணி தேவியே ! நின்பாதம் போற்றி !

வளமெலாம் எம்வாழ்வில் உன்னாலே ! போற்றி !

பரிவான உனதுஅருட் பார்வையதனாலே

பரி, பசுக்கள் நிறைந்திடவே செய்திடவே வேண்டும் !

क्षेत्रस्य पते मधुमन्तमूर्मिं धेनुरिव पयो अस्मासु धुक्ष्व ।

मधुश्चुतं घृतमिव सुपूतमृतस्य नः पतयो मृळयन्तु ॥२॥

இயற்கையெனும் அன்னையவள் அன்பலையி னாலே..

வயல்வெளியில் அறுவடைகள் மேன்மையுறச் செய்வாய் !

வெண்ணையினைக் கடையவரும் நெய்யதனைப் போல...

உன்னருளை எங்களின்மேல் உருகிவரச் செய்வாய் !

मधुमतीरोषधीर्द्याव आपो मधुमन्नो भवत्वन्तरिक्षम् ।

क्षेत्रस्य पतिर्मधुमान्नो अस्त्वरिष्यन्तो अन्वेनं चरेम ॥३॥

அண்டமெலாம் இனிதாக ! செடிகொடிகள் இனிதாக !

விண்ணதுவும் இனிதாக...! தண்ணீரும் இனிதாக...

உன்னருளும் எங்களிடம் தங்கி இனிதாகி விட...

உன்னடியைத் தொழுதிடுவோம் எங்கள்நில ராணியளே !

शुनं वाहाः शुनं नरः शुनं कृषतु लाङ्गलम् ।

शुनं वरत्रा बध्यन्तां शुनमष्ट्रामुदिङ्गय ॥४॥

ஏர்பூட்டும் விவசாயி வளம் கொணர்க !

ஏரிழுக்கும் காளைகளும் வளம் கொணர்க !

ஏர்பிணைக்கும் கயிறதுவும் வளம் கொணர்க !

உழுதுவரும் ஏரதுவும் வளம் கொணர்க !

வழிகாட்டும் நடுப்பாகம் வளம் கொணர்க !

शुनासीराविमां वाचं जुषेथां यद्दिवि चक्रथुः पयः ।

तेनेमामुप सिञ्चतम् ॥५॥

கார்மேக தேவர்களும் மனம் மகிழ்க...!

சீரான எங்கள்நல வேண்டுதலால்...

பாரெல்லாம் குளிர்ந்திடவே நல்மழையைப்

பொழிந்திடவே வேண்டுகிறோம் தேவியளே !

अर्वाची सुभगे भव सीते वन्दामहे त्वा ।

यथा नः सुभगाससि यथा नः सुफलाससि ॥६॥

நல்லதொரு மகசூலைத் தந்திடுவாய் சீதையளே !

உன்புகழைப் பாடிஉனை வணங்குகிறோம் தேவியளே !

इन्द्रः सीतां नि गृह्णातु तां पूषानु यच्छतु ।

सा नः पयस्वती दुहामुत्तरामुत्तरां समाम् ॥७॥

ஏர்பிடித்து செலுத்துகையில் இந்திரனே தாங்க...

ஏரிழுத்த பாதையினை பூசனவன் காக்க !

வளம் கொழிக்கும் பூமியின்தாய் எங்களுக்கு என்றும்

நலம் கொடுக்க வேண்டுகிறோம் நிலராணி தேவியளே !

शुनं नः फाला वि कृषन्तु भूमिं शुनं कीनाशा अभि यन्तु वाहैः ।
शुनं पर्जन्यो मधुना पयोभीः शुनासीरा शुनमस्मासु धत्तम् ॥८॥

நிலம் உழவு செய்துவரும் ஏர் வளங்கள் தருக !
மாடுகளை பூட்டுகிற உழவன் வளம் தருக !
வருணனவன் நன்மழையை எங்கனுமே பொழிக !
கடவுளர்கள் வளங்களெலாம் எங்களுக்குத் தருக !